OS.3/2023

நாள். 07.10.2025

வா.சா.1 – மன்சூர் அலி

<u>2 முதல் 4, 6, 7ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சர்வேஎண்.53/5ல் 3 ஏக்கர் 84 சென்ட் சவர் மைதீன், குப்பை, பாத்தம்பீவி, சாகுல் ஹமீது ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என கூறியுள்ளேன், எப்படி பாத்தியம் என்றால் பூர்வீக பாத்தியம். மேற்படி நான்கு நபர்களும் உடன் பிறந்தவர்களா என்றால் இல்லை. மேற்படி நான்கு நபர்களுக்கும் எப்படி பூர்வீக பாத்தியம் என்றால் குப்பை, பாத்தம்பீவி என்ற சீனி இப்ராம்ஷா சாகிப் ஆகிய இருவர்களுக்கு மட்டுமே பாத்தியம். சவர் மைதீனுக்கும், சாகுல் ஹமீதுக்கும் பூர்வீக பாத்தியம் கிடையாதா என்றால் கிடையாது, அவர்கள் பெயர் எப்படி செட்டில்மென்ட் பட்டாவில் வந்தது என்று தெரியவில்லை. சாகுல் ஹமீது யார் என்றால் யார் என்றே தெரியாது. யார் என்றே தெரியாது என்பதால் அவர் இறந்துவிட்டார் என சொல்கிறேன் என்றால் சரிதான். 10.08.1961 தேதியிட்ட கிரைய பத்திரம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் குப்பை, சவர் மைதீன், சீனி இப்ராகிம்ஷா சாகிப் மகன் சேது ஆகிய மூவரும் வள்ளியம்மாளுக்கு எழுதிக்கொடுத்தார்கள். 10.08.1961 கிரைய பத்திரத்தில் மொத்த விஸ்தீரணமான 9 ஏக்கர் 28 சென்டில் கீழ்புறம் 3 ஏக்கர் 37 ½ சென்ட் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்குமாலில் எங்களால் விடப்பட்ட பொதுப்பாதைக்கும் கிழக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கள் கிரைய நிலத்திற்கு மேற்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கள் கிரைய நிலம் என சொல்லப்பட்டுள்ளது வள்ளியம்மாள் கிரைய நிலம் என்றால் தெரியாது. 10.08.1961 கிரையபத்திரத்தில் கிரையம் எழுதிக்கொடுத்தவர்களுக்கு 3 ஏக்கர் 84 சென்ட் பாத்தியம் என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 10.08.1961 கிரையபத்திரத்தில் கிரையம் எழுதிக்கொடுத்தவர்களுக்கு மேற்கே அவர்களால் விடப்பட்ட பாதைக்கு கிழக்கே எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல.

மேற்படி கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நான்குமாலான பாதைக்கு கிழக்கே சொத்துக்கள் இருந்திருந்தால் 46 1/2 சென்டு நீக்கி என கிரையம் கொடுத்திருப்பார்கள் என்றும் இல்லை என்பதால் தான் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நானும், என்னுடைய முன்னோர்களும் 46 ½ சென்டை தொடர்ந்து அனுபவம் செய்து வந்தோம் என்பதற்கு நான் தாக்கல் செய் ஆவணங்கள் தவிர்த்து வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 46 ½ சென்டு குப்பைக்கு குடும்ப ஏற்பாட்டில் பாத்தியம் என கூறியுள்ளேன், எப்போது குடும்ப ஏற்பாடு நடந்தது, யார்யாருக்குள் ஏற்பட்டது என்றால் 1975ம் ஆண்டு என் பாட்டி ஆசியாமரியத்திற்கும், குப்பைக்கும் நடந்தது. ஆசியாமரியம் யார் என்றால் குப்பையின் சகோதரி. சவர்மைதீனும், பாத்தம்பீவியோ குப்பைக்கு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் குடும்ப ஏற்பாட்டிற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. குப்பை ஆசியாமரியத்திற்கு இனாமாக எப்போது கொடுத்தார் என்றால் 1975ம் வருடத்திலேயே சொத்து பிரச்சனை ஏற்பட்டதால் கொடுத்துவிட்டார். என்னுடைய வழக்குப்படி தாவா சொத்து சவர்மைதீன், குப்பை, பாத்தம்பீவிக்கு பாத்தியப்பட்டிருந்தநிலையில் குப்பை மட்டும் ஆசியாமரியத்திற்கு வாய்மொழிஇனாம் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல. குப்பை பெயரிலோ, ஆசியாமரியத்தின் பெயரிலோ பட்டாவோ, வரிரசீதுகளோ இல்லை என்றால் சரிதான். ஆசியா மரியத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 5 பிள்ளைகள். ஆசியா மரியத்திற்கு 5 பிள்ளைகள் இருந்தாலும் என் அப்பா அப்துல் ஹமீதுக்கு மட்டும் எப்படி பாத்தியம் என்றால் என் அப்பா குடும்ப பொறுப்பை பார்த்துக்கொண்டதால் என் பாட்டி என் அப்பாவிற்கு கொடுத்தார். என்னுடைய பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் என் அப்பா குடும்ப பொறுப்பை பார்த்துக்கொண்டதால் என் பாட்டி ஆசியாமரியம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 5. என்னை தவிர்த்து என்னுடைய சகோதர, சகோதரிகள் தாவா சொத்தில் உரிமை கொண்டாடவில்லை என்றால் சரிதான். என்னுடைய

வழக்குப்படி நான் மட்டும் வழக்கு சொத்தில் தனித்த உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும், சகோதர, சகோதரிகளுக்கும் பாகம் நடந்ததா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கு மட்டும் பாத்தியம் என்பதை காட்டுவதற்கு பட்டவோ, வரிரசீதுகளோ கிடையாது என்றால் சரிதான். 1961ம் ஆண்டில் கிரையம் பெற்ற வள்ளியம்மாள் பலதேதிகளில், பலநபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வள்ளியம்மாள் யார்யாருக்கு என்னென்ன தேதிகளில் கிரையம் கொடுத்தார் என்ற விவரத்தை என்னுடைய பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வள்ளியம்மாளிடம் கிரையம் பெற்ற நபர்களை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மற்ற நபர்களை தரப்பினர்களாக சேர்க்காமல், 1, 2 பிரதிவாதிகளை மட்டும் சேர்த்ததற்கு என்ன காரணம் என்றால் அவர்கள்தான் கடைசியாக கிரையம் பெற்ற நபர்கள். 1, 2 பிரதிவாதிகள் 20.09.1990 தேதியில் வள்ளியம்மாளிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 20.09.1990 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 83 சென்டில் 1 ஏக்கர் 25 சென்டு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 20.09.1990 தேதியிட்ட கிரைய பத்திரத்திலும் தென்வடல் பாதைக்கு கிழக்கு என ஒரு நான்குமால் உள்ளது என்றால் சரிதான். 1961ம் ஆண்டில் வள்ளியம்மாள் எந்த சொத்தை கிரையம் பெற்றாரோ அந்த சொத்தில் தான் 1990ம் ஆண்டிலும் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் கிரையம் வாங்கியதைவிட அதிகமாக கொடுத்துள்ளார். வள்ளியம்மாள் 1981 முதல் 1990 வரை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 1961ம் ஆண்டு கிரையப்பத்திரத்தில் மேற்குப்பக்கம் அவருக்கு கூடுதலாக நிலங்கள் இருந்ததால்தான் நான் சொன்னமாதிரி கூடுதலாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு கூடுதலாக இடம் இருந்ததற்கு ஆவணங்கள் இல்லை. 1981 – 1990 வரை நடந்த கிரையங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றும் ஆனால் நான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக 10.10.2022 அன்றுதான் தெரிந்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிராதிவாதிகளும்,

அவர்களது முன்னோர்களும் எனக்கு தெரிந்தே 1961 முதல் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நிறைய நபர்கள் வீடுகட்டியுள்ளார் என்றால் சரிதான். வீடுகள்கட்டி 20 வருடங்கள் இருக்குமா என்றால் தெரியாது. 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து அமீர்அலி என்பவர் 5 சென்டு நிலத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் கிரையம் வாங்கியதற்கான ஆவணங்கள் வில்லங்க சான்றிதழில் இல்லை, ஆனால் வீடு கட்டியுள்ளார். அமீர்அலி எனக்கு உறவினர் என்பதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் வள்ளியம்மாளிடம் கிரையம் வாங்கி பின்னிட்டு பாகம் செய்து கொண்டு 3 முதல் 11 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது காலவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1990ம் ஆண்டு முதல் 1, 2 பிரதிவாதிகளும் அவர்களிடம் கிரையம் பெற்ற மற்ற பிரதிவாதிகளும் தொடர்ந்து சட்ட காலத்திற்கு மேல் அனுபவித்து வருவதால் என் வழக்கு காலாவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை தாவா சொத்திற்கான பட்டா, வரிரசீதுகள் பிரதிவாதிகள் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி விவரங்களை பிரதிவாதிகள் தெரிவித்து ஏற்கனவே பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றும், அந்த விவரத்தை நான் என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.